புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# பெரும்பாணாற்றுப் படையில் விருந்தோம்பல்

*முனைவர் செ.கிளாடின் சுஜிலா,*
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழாய்வு மையம்,*
*இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல்*
*கல்லூரி நெய்யூர் – 629 802.*
*கன்னியாகுமரி மாவட்டம்.*

*ஆய்வுச் சுருக்கம்*

*பண்டைத் தமிழரின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தும் கருவூலமாக திகழ்வது தமிழ் இலக்கியங்களே. இவ்விலக்கியங்கள் பண்டைத் தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர் என்று கூறுவதோடு மட்டுமின்றி அக்கால மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், விருந்தோம்பல் முதலியவற்றை விளக்குகின்ற அறிவுப்பெட்டகமாகத் திகழ்கின்றன. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவாகும் . உண்டிக் கொடுத்தோர், உயிர் கொடுத்தோர் என்பது முதுமொழி. அவ்வகையில் பெரும்பாணாற்றுப் படையில் காணப்படும். விருந்தோம்பலை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.*

*முன்னுரை*

*சங்க நூற்களான பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் பண்டைத் தமிழரின் வாழ்வியலையும், வரலாற்றையும் எண்ணங்களையும் பிரதிபலிக்கும் கருத்துக் கருவூலங்களாகும். சங்ககாலம் முதல் இன்று வரையிலான இலக்கியங்கள் அனைத்திலுமே விருந்தோம்பல் பண்பு மிகவும் உயர்வாக கூறப்பட்டுள்ளன. சங்க காலத்தில் பசிப்பிணி ஆற்றும் நோக்கில் விருந்தோம்பல் என்னும் பண்பாட்டை வகுத்து அதில் குறைவு ஏதுமின்றி பிற உயிர்களை பாதுகாத்தார்கள் என்ற செய்தியை இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றன.*

*பெரும்பாணாற்றுப்படை*

*தொண்டைமான், இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணார் பாடியது இவ்வாற்றுப்படையாகும். பேரியாழ் வைத்துள்ள பாணன் கடுமையான வெயிலில் தன் சுற்றத்துடன் தன்னை ஆதரிக்கும் வள்ளலை நாடிச் செல்கிறான். இந்நிலையில் அவன் எதிரில் வரும் மற்றொரு பாணன் அவன் நிலை கண்டு வருந்தி அவனை காஞ்சியில் அரசாளும் தொண்டைமான் இளந்திரயனிடம் செல்லும்படியாகவும், செல்லும் வழி குறித்தும் வழியில் காணப்படும். ஊர், அங்கு வாழும் மக்கள், கிடைக்கும் உணவு, அரசனின் விருந்தோம்பல், வீரம் கொடை குறித்தும் ஆற்றுப் படுத்துவதாய் 500 பாடல்களைக் கொண்டு பெரும்பாணாற்றுப்படை அமைந்துள்ளது.*

*சங்ககால உணவுகள்*

*சங்கத் தமிழர் மரக்கறியுணவாயினும், இறைச்சியாயினும் நிறைய உண்பதில் அக்கறையுடையவர்கள் முக்கிய பண்டிகை நாட்களில் சிறப்புவகை அரிசியை சமைத்து அவற்றுடன், நெய் தயிர் கீரை முதலியவைகளை பிசைந்து உண்டனர். மேலும் அரிசி, திணை போன்றவற்றை பாலில் வேகவைத்து உண்டனர். எச்சாதியினராயினும் கைம்பெண்களுக்கு பழையச் சோறும் வேளைக் கீரையுமே கொடுத்தனர். துறவிகள் பழைய சோறும் வெந்நீரும்*

உட்கொண்டு திருப்தியடைந்தனர். சமுதாயத்தில் பிற இனத்தவர்கள் இறைச்சியை உண்டனர். மன்னர்களிடம் ஆடிப்பாடிச் சென்று பாணரும் விறலியரும் புலால் உணவைத் தின்று களித்தனர்.

விருந்தோம்பல் – விளக்கம்

இவ்வாழ்க்கையின் உயர்நாடி விருந்தோம்பல் ஆகும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே இல்லறத்தின் தலையாய நெறியாகும். விருந்தோம்பல் கணவனுடன் இல்வாழ்க்கை நெறியில் ஒழுகும் பெண்டிரின் உரிமையாகவும் கடமையாகவும் இருந்தது. விருந்தோம்பலை கடைபிடிப்பவர்கள் வாழ்வில் இன்பமும் செல்வமும் பெருகி வழியும் என்பதை

“வருவிருந்து வைகலும் ஒப்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று”

என்ற திருக்குறள் பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

விருந்தோம்பலில் இடம்பெறுவோர்

விருந்தோம்பலை மேற்கொள்வோர் பெருநிலப்பரப்பை எல்லையாக கொண்டு அரசாளும், அரசனும், குறுநிலங்களையும் சிறு குன்றுகளையும் ஆட்சிபுரியும் குறுநிலமன்னர்களும் , குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என திணைக் குடியில் வாழும் மக்களும், பாணர்களும் , அவரவர் நிலைகளிலிருந்து விருந்தோம்பலை மேற்கொண்டனர். கொடுப்பதால் பெருமையை அடையும் நிலையே விருந்தோம்பலின் மாட்சிமையாகும். கொடுக்கும் நிலையில் மேற்கூறப்பட்டவர்களும், பெற்றுக் கொள்ளும் நிலையில் பாணர் கூட்டத்தாரும், விறலியர்களும் எளிய வழிப் போக்கர்களும் இடம் பெறுவர்.

எயிற்றியர் விருந்தோம்பல்

பாணர்கள் காஞ்சிக்குச் செல்லும் வழியில் நடந்தால் முதலில் அவர்கள் அடைவது எயிற்றியர் வாழும் குடிசைப் பகுதிகளாகும். அங்கு எயிற்றியர்கள் எறும்புப்புற்றை உலக்கையால் குத்திக் கிளறி அவை சேர்த்து வைத்த புல்லரிசியை வாரிக் கொண்டு வந்து நிலத்தில் பதிந்த குழியின் உரலில் இட்டு குற்றி எடுத்து, ஆழமான கிணற்றில் ஊறும் ஊற்றிலிருந்து தண்ணீர் எடுத்து பானையில் ஊற்றி அடுப்பில் ஏற்றி உணவு சமைத்து தேக்கிலையில் வைத்து கருவாடும் சேர்த்துக் குவியலாக வந்த விருந்தினருக்குத் தருவர் இதனை,

“முரவு வாய்க் குழிசி அடுப்பு ஏற்றி
வாராது அட்ட வாடு ஊன் புழுக்கல்
-----------------------------------------------------
தெய்வ நடையின் தேக்கிலைக் குவைஇ, நும்
பைதீர் கடும்பொடு பதும்மிகப் பெறுகுவீர்

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

எயினர் விருந்தோம்பல்

ஈந்தின் விதை போன்ற சிவந்த அரிசி சோற்றின் மேல் அக்குமணி போன்ற முட்டையை உடைய உடும்பின் பொரியலோடு அரிசிச் சோறு வெளியே தெரியாத படி மிகுந்த அளவாய் வங்குவர். இந்த உணவு ஒரு வீட்டில் மட்டுமின்றி மனைகள் தோறும் வழங்கப்படும் என்பதை.

“ சுவல் வினை நெல்லின் செல்அவிழ்ச் சொன்றி
குமலி தந்த மனவுச்தேல் உடும்பின்
வறைகால் பார்த்து, வயின் தொறும் பெறுகுவீர்”

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன.

கோவலர் விருந்தோம்பல்

மோர் விற்றதால் கிடைத்த நெல்முதலிய உணவால் தன் சுற்றத்தார் எல்லோரையும் உண்ணச் செய்யும் இயல்புடைய கோவலர் குடியிருப்புக்குச் சென்றால் அங்கே நண்டின் பார்ப்பை ஒத்த திணையால் ஆக்கிய சோற்றை பாலுடன் தருவர் இதனை

“ மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுயார்ப்ப அன்ன

பசுந்திணை முதல் பாலொடும் பெறுகுவீர்"
என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

உழவரின் விருந்தோம்பல்

முல்லை நிலத்தை உழுது உண்பாரின் ஊரை அடைந்தால் பூளைப் பூபோன்ற வரவினது பருக்கைகளாலாக்கிய சோற்றை வேங்கைப் பூவை ஒத்த அவரை விதையின் பருப்பைப் போட்டுத் துளாவி . தம்மிடம் வந்த விருந்தினரை சிறப்பாக கவனிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தம் மனைக் கண் வளரும் கோழியை சமைத்து விருந்தளிப்பர் என்பதை

"வினைஞர் தந்த வெண்ணெல் வல்சிட
மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவீர்"

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

பட்டினத்து மக்களின் விருந்தோம்பல்

பட்டினத்து மக்கள் நெல்லையிடித்து மாவாக்கி அதனை உணவாகக் கொடுத்து, வெண்பற்றியுடன் சேரவிடாமல் தனித்து வளர்க்கப்பட்ட ஆண்பன்றியின் கொழுவிய நிணமுடைய தசையோடு கள்ளும் சேர்த்து கொடுப்பர்.

மேலும் தென்னந் தோப்புகளை உழுது பண்படுத்தும் தொழிலையுடையவர்கள் பலாவும், தெங்கம், வாழையும் இவற்றின் கனிகளோடு வள்ளி கிழங்குகளையும் கொடுப்பர்.

அரசனின் விருந்தோம்பல்

மேற்கூறப்பட்ட மக்களின் விருந்தோம்பலை பெற்றுக்கொண்ட பாணன் மன்னனிடம் வருகின்றபோது அரசன் பாணனின் கிழிந்த ஆடையை அகற்றி புத்தாடை புனைய வைத்து அவன் களைப்பை போக்குவதற்காக மான் முதலிய இறைச்சியும், கோழி முதலிய பறவை இறைச்சியையும் முனை முறிவின்றி திரண்ட சோற்றையும் , தாய் தன் பிள்ளையருகில் நின்று உணவளிப்பது போல் அரசன் திரையன் விருப்பத்தோடு உணவு ஊட்டினான் என்பதை

" இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் ஊழ்இ
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை வல்லோன்"

என இப்பாடல் அடிகள் தெளிவுபடுத்துகின்றன.

விருந்தோம்பலின் மாண்புகள்

விருந்தினர் திரும்பிச் செல்ல விரும்பின் அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தி புலம்பி, ஏழடி பின் நடந்து வழியனுப்பும் நல்லுள்ளம் அரசர்களுக்கு இருந்தது. விருந்தினர்களுக்கு கொடையளித்து அனுப்பும் அரசனின் மனநிலை, பாலை நிலத்தில் பெய்த மழையுடன் உவமையாக கூறப்படுகின்றது. பரிசில் பெற்றுவரும் பாணர்கள் பொருள்களை வாரிக் கொண்டு வருவது கடல்நோக்கி ஒடும் ஆற்றுடன் உவமை கூறப்படுகின்றது.

முடிவுரை

சங்கத் தமிழர் திணை சார்ந்த வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். அந்தத் திணைக்குரிய கருப்பொருட்களைக் கொண்டு வீடமைத்து அங்கு கிடைக்கும் பொருட்களைக் கொண்டும், வேட்டையாடி உணவு சமைத்து தானும் உண்டு தன்னை நாடி வந்த வரையும் உண்பித்தும் வாழ்ந்ததையும் இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றன. உணவு அளிக்கும் உள்ளம் இருந்தால் விருந்தோம்பல் சிறப்படையும் என்பதை பெரும்பாணாற்றுபடையில் உழவர், எயினர், பட்டினத்தார் கோவலர். அந்தணர்கள் மற்றும் அரசனின் விருந்தோம்பல் மூலம் அறிய முடிகின்றது. இவ்விருந்தோம்பலானது மனித உறவுகளை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

பார்வை நூல்கள்


1. குறள் - 83
2. பெரும் பாணாற்றுப்படை பா.வரி - 97 -105
3. பெரும் பாணாற்றுப்படை பா.வரி - 130 -133
4. பெரும் பாணாற்றுப்படை பா.வரி - 166 -168
5. பெரும் பாணாற்றுப்படை பா.வரி - 256 -256
6. பெரும் பாணாற்றுப்படை பா.வரி - 306 -307


********* ********* ********** ********* ********* ********** ********** **********